PR/2020/10

Embassy of Japan

No. 20, Srimath R. G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka
TEL:94-11-269-3831~3, FAX : 94-11-269-8629
E-mail: cultujpn@sltnet.lk

13 ஜூலை, 2020

**ஊடக வெளியீடு**

**இலங்கையின் போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளை வலுப்படுத்த ஜப்பான் உதவி**

இலங்கை அரசாங்கத்தின் போதைப்பொருள் தடுப்புச் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் 200 மில்லியன் ஜப்பானிய யென்களை (சுமார் 345 மில்லியன் ரூபாய்) இலங்கைக்கு நன்கொடை உதவியாக ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது. இந்த நன்கொடை தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நிகழ்வு நிதி, பொருளாதார மற்றும் கொள்கை விருத்தி அமைச்சில் 2020 ஜூலை 13 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் சுகியாமா அகிரா மற்றும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை விருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆடிகல ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

அண்மைக் காலமாக இலங்கையில் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், வளர்ந்து வரும் ஒரு சமூகப் பிரச்சனையாகவும் இனங்காணப்பட்டிருந்தது. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் மற்றும் பாதாள உலக செயற்பாடுகளில் போதைப்பொருள் கடத்தல்கள் பெருமளவு தொடர்பு கொண்டுள்ளதுடன், சமூகத்தில் பாரியளவு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானிய அரசாங்கம் JICA ஊடாக பொலிஸ் அதிகாரிகளுக்கு திறன் விருத்திச் செயற்பாடுகளுக்கான உதவி மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் திறனைக் கட்டியெழுப்புவதற்குமான பயிற்சிகளை வழங்கவுள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் வகையில், ஜப்பானிய அரசாங்கத்தினால் நாட்டினுள் சட்டவிரோத போதைப்பொருள்களை ஒழிப்பதற்காக மேலதிக நன்கொடை உதவியும் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஜப்பானிய நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட நவீன சாதனங்கள் இலங்கை காவல் துறைக்கு வழங்கப்பட்டு, அத்துறையினால் போதைப்பொருள் பாவனையின் பின்னர் வாகனங்களை செலுத்திச் செல்வோரை இனங்காணல் மற்றும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான திறன் வலிமைப்படுத்தப்படும். இதில் GC–MS (Gas Chromatograph Mass Spectrometer) அடங்கியிருப்பதுடன், இதனால் போதைப்பொருட்கள், வெடிபொருட்கள், சந்தேகத்திற்கிடமான பொருட்களை மறைக்கக்கூடிய மொபைல் X-கதிர் ஸ்கானர்கள் மற்றும் போதைப்பொருட்கள் மற்றும் வெடிபொருட்களை கைகளால் ஏந்திய வண்ணம் இனங்காணக்கூடிய Raman spectrometers போன்றன அடங்கியுள்ளன.

இந்த உதவியினூடாக, இலங்கையில் போதைப் பொருள் பாவனையால் எழுந்துள்ள சவால்களை கட்டுப்படுத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான மற்றும் போதைப்பொருட்களிலிருந்து விடுபட்ட பாதுகாப்பான இலங்கையைக் கட்டியெழுப்ப ஜப்பானிய அரசாங்கம் பங்களிப்பு வழங்கும்.

************************************************************

மேலதிகத் தகவல்களுக்கு பொருளாதார கூட்டுறவுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.
Tel: 011-269-3831~3 (ext.224)